2. அறிக்கை அளித்தல்.

பொது நிறுவனங்கள் குழு.

திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது நிறுவனங்களின் கீழ்க்காணும் அறிக்கைகளை அக் குழுவின் தலைவரின் சார்பாக நான் இந்தப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(அ) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1982—83 மற்றும் 1983—84 ஆம் ஆண்டுகளுக்கான அறிக்கைகளில் (வணிகம்) வேளாண்மைத் துறை தொடர்பான பத்திகள் மீதான மேற்படி குழுவின் நாற்பத்தொன்பதாவது அறிக்கை.

(ஆ) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1982-83 மற்றும் 1983—84 ஆம் ஆண்டுகளுக்கான அறிக்கைகளில் (வணிகம்) கைத்தறி துணிகள் கதர்த்துறை தொடர்பான பத்திகள் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் ஐம்பதாவது அறிக்கை.

3. வரவு-செலவுத் திட்டம், 1987-88, பொதுவிவாதம்— (தொடர்ச்சி).

திரு. கி. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் நிதியமைச்சர் அவர்களால் சமர்ப்பிக்கப் பட்டிருக்கும் நிதிநிலை அறிக்கை பற்றி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக ஏற்கனவே பல உறுப்பினர்கள் தங்களது கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். அதையொட்டி எனது கருத்துக்களையும் தெரிவிப்பதற்கு முன்பு அண்மையில் அரியலூர் பக்கத்திலே நடந்த இரயில்வே விபத்தில், குண்டு வெடிப்பு காரணமாக ஏற்பட்ட விபத்தில் உயிரிழந்த தோழர்களுக்கும், தோழியர்களுக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகவும் என் சார்பாகவும் ஆழ்ந்த அஞ்சலியைச் செலுத்துவதோடு, அவர்களை இழந்து வாடுகின்ற குடும்பத்திற்கு எனது அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS